செய்தி வெளியீடு எண். 109 நாள். 21.02.2018

# மவுண்ட் - பூவிருந்தவல்லி – ஆவடி சாலையில் வீரராகவபுரம் பாலம் கட்டும் பணிக்கான பூமி பூஜை நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்ஆட்சி மொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் குத்துவிளக்கேற்றி, அடிக்கல் எடுத்து வைத்தார்கள்

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், மவுண்ட் - பூவிருந்தவல்லி - ஆவடி சாலையில் வீரராகவபுரம் பாலம் கட்டும் பணிக்கான பூமி பூஜை நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்ஆட்சி மொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் இன்று (21.02.2018) குத்துவிளக்கேற்றி, அடிக்கல் எடுத்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்ஆட்சி மொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது :

வீரராகவபுரத்தில், மவுண்ட் - பூவிருந்தவல்லி – ஆவடி சாலை கி.மீ.13/6 –ல் இருந்த பழைய பாலம் கடந்த 2015 டிசம்பர் மாதத்தில் பெய்த கன மழையால் முற்றிலும் இடிந்து சேதமடைந்து விட்டது. போக்குவரத்தினை சீர்செய்ய தற்காலிக குழாய்பாலம் அமைத்து, போக்குவரத்து சீர் செய்யப்பட்டது. சேதமடைந்த அப்பாலத்தினை திரும்ப கட்டுவதற்கு, நெடுஞ்சாலைத்துறை, ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு வளர்ச்சி திட்டம் (CRIDP) 2016-2017-ன் கீழ் ரூ.450 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பாலம் 2.5 மீட்டர் உயரமும், 25 மீட்டர் அகலமும், 32 மீட்டர் நீளமும், 6 வழி சாலை மேம்பாலமாக கட்டி முடிக்கப்படும் என மாண்புமிகு தமிழ்ஆட்சி மொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் கோட்ட செயற்பொறியாளர் (நெடுஞ்சாலைகள்துறை) திரு.தட்சிணாமூர்த்தி, உதவி இயக்குநர் (நெடுஞ்சாலைகள்துறை) திரு.மதியழகன், உதவி கோட்ட செயற்பொறியாளர் (நெடுஞ்சாலைகள்துறை) திரு.பிரபு, திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.கெ.ரா.திவ்யஸ்ரீ, பூவிருந்தவல்லி வட்டாட்சியர் திருமதி.ரமா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**